RNI No: TNTAM/2023/88599

# திரை மொழி

THIRAI MOZHI

TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

| திரை : 03 | மொழி : 2 | செப்டம்பர் - 2025 | பக்கம்: 8 | விலை: ரூ.10 |
|---|---|---|---|---|
| Volume : 03 | Issue : 2 | September - 2025 | Page: 8 | Price: Rs. 10 |




# ‘ஹைக்கூ’ இயக்குநர் லிங்கூ




இயக்குநர் லிங்குசாமி எழுதிய 'லிங்கூ 3: பெயரிடப்படாத ஆறுகள்' ஹைக்கூ கவிதை நூல் வெளியீட்டு விழா சென்னை மியூசிக் அகாடமி அரங்கில் 28. 8. 25 அன்று மாலை நடைபெற்றது. விழாவில் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன், முனைவர் பர்வீன் சுல்தானா , இயக்குநர்கள் லிங்குசாமி, கௌதம் வாசுதேவ் மேனன், பிருந்தா சாரதி, திரைக் கலைஞர் அபிராமி, கவிஞர் ஜெயபாஸ்கரன், விஷ்ணு அசோசியேட் ஆர். சிவகுமார், படைப் புப் பதிப்பகம் ஜின்னா ஆஸ்மி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

லிங்கூ3 வெளி யீட்டு விழாவில், காணும் காட்சிகளில் வாழ்வியலை யும் அவற்றின் உள்ளார்ந்த தத்து வத்தையும் இனங் கண்டு எளிய சொற்களில் அழகியல் குன்றாமல் சுருக்கமாக வெளிப்படுத்துபவை லிங்குசாமியின் ஹைக்கூ கவிதைகள் என அனைவரும் பாராட்டினார்கள்.

**''வயல் முழுக்க வண்ணத்துப் பூச்சிகள் என்ன செய்ய களை பறிக்க வேண்டும்.**

> **யார் யாரை ஆட்டுவிப்பது நடராசர் முன் சுடர்**

கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களால் 'ரியல் ஹைக்கூ' என்று பாராட்டப்பட்டது இந்த கவிதை.

**''யார் யாரை ஆட்டுவிப்பது நடராசர் முன் சுடர்.**

**''வரப்பில் கொக்குகள் வயலில் நிழல்கள் பியானோ"**

அணிந்துரையில் கவிஞர் கலாப்ரியா அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டு இருக்கின்றன இந்தக் கவிதைகள்.

**''பாரம் சுமந்து நடக்கிறது வீரனை இழந்த குதிரை.**

''முதலில் தண்ணீர் இல்லை என்றார்கள் இப்போது ஆறே இல்லை என்கிறார்கள் 'லிங்கூ 2' வில்



இப்படியான சிறந்த கவிதைகளை எழுதிய லிங்குசாமி இப்போது வெளிவந்திருக்கும் 'லிங்கூ3' இல்,


**''கிளையிலிருந்து வழியும் மழைத்துளி ஒரு சூரியனையும் சேர்த்து உதிர்க்கிறது.**

> பக்கம் 3ல் தொடரும்



# அந்தேரா (Andhera) - அறிவியலும் அமானுஷ்யமும்

## வெப்சீரிஸ் விமர்சனம்




இந்தியாவின் ஒரு மெட்ரோ சிட்டியில் இருட்டு(Darkness)—இதுதான் இந்த வெப் சீரிஸில் அடி நாதம். ஒவ்வொரு கதாபாத்திரமும் இருட்டை தூரத்தில் பார்த்து மிரட்ச்சிக்கு ள்ளாகின்றனர். இருட்டு தங்களை நெருங்கி வர வர அலறித் துடிக்கின்றனர்.

மேலே சொன்ன இருட்டு என்பது ஒரு உவமை தான். இது வெறும் இருட்டல்ல, உயிரோடு வாழும் ஒரு சக்தி. அந்த சக்தியே "தமா(Tama)", அதாவது மனிதர்களின் பயம், குற்றவுணர்ச்சி மற்றும் உளவியல் அழுத்தம் ஆகியவற்றையே தனக்கான ஆற்றலாக எடுத்துக்கொண்டு சஞ்சரிக்கும் உருவமற்ற ஒன்று. இப்படி ஒரு விசித்திரமான அமானுஷ்யம் மட்டுமல்ல அற்புதமான அறிவியல் புனைவு அனுபவமும் நிறைந்த அந்தேரா சீரிஸ் 8 எபிசோடுகளாக விரிகிறது.

ஒருபுறம் ஆத்மா ஹீலிங் எனும் தியான வகுப்பில் பயின்றவர்கள் அடுத்தடுத்து மர்மமான முறையில் தற்கொலை செய்து கொள்கின்றனர். அப்படி பானி என்னும் இளம்பெண்ணின் மரணத்தை இன்ஸ்பெக்டர் கல்பனா (Priya Bapat) விசாரணை செய்யத் தொடங்குகிறாள். ஜே (Karanvir Malhotra), ஒரு மருத்துவ மாணவன், தான் முன்பின் அறியாத பானியின் மரணம் தொடர்பான கனவால் மிரட்சிக்குள்ளாகிறான், தனது உளவியல் அழுத்தத்தை போக்க உதவமுயன்ற தனது அண்ணனும் இளம் மருத்துவருமான பிரித்வியை இருட்டு அபகரித்துக் (Abduct) கொண்டதால் குற்ற உணர்ச்சிக்கு ஆளாகிறான். ஜே உட்பட பலரை பூமியை நோக்கி வருகை தரும் தனது திட்டத்திற்கு இரையாக்க முயற்சிக்கிறது 'தமா'.

அமானுஷ்யங்களை குறித்த தகவல்களை யூட்யூபில் பதிந்து வரும் ரூமி, ஜேவுக்கு உதவுகிறாள். தனது அம்மா ஒரு கட்டத்தில் இருந்த அதே நிலையில்தான் தற்போது ஜே இருக்கிறான் என்பதால் அவனுக்கு அவள் உதவினாலும், இறுதியில் தன் அம்மாவுக்கு என்ன நடந்தது என்பதும் இதன் மூலம் ரூமிக்கு தெரிய வருகிறது. முதற்பாதியில் ரூமியின் மாமாவும் ஜேவின் உளவியல் மருத்துவருமான மது ஓபராய் (Dileep Shankar) மீது பெருத்த சந்தேகம் வருகிறது. ஆனால் சாகாவரம் (Immortality)ஐ சாதிக்க மனிதர்கள் மீதான இந்த மருத்துவ ஆராய்ச்சியை தனது இலக்காக கொண்டு செயல்படும் பிரித்வியின் பேராசிரியர் டாக்டர் சகாய் (Pravin Dabas) தான் அத்தனைக்கும் காரணம் என்கிற உண்மை தெரிய வரும்போதும் திரைக்கதை இன்னும் இறுக்கம் பெறுகிறது.

இதனிடையே ஜே, ரூமி மற்றும் ஜூட் (Prajakta Koli) என்ற காமிக் ஆர்வலர்—இவர்கள் அனைவரும் சேர்ந்து Tamaவின் மர்மத்தை தங்கள் அனுபவங்கள் வழியே கண்டடை கின்றனர். இவர்களுடன் காவலர் கல்பனாவும் சேர்ந்துகொள்ள இந்த விசாரணை அவர்களை உபர்லைஃப் என்ற மருந்து நிறுவனத்தின் இருண்ட பரிசோதனைக்கும், அங்கு பரிசோதனைக்காக பிணையில் சிக்கும் சிறுவன் ஓமரை வைத்து Tamaவை இந்த உலகத்திற்கு வரவேற்க ஆயிஷா போடும் திகில் திட்டம் என அனைத்தும் எபிசோடு எபிசோடாக விரிகிறது. இன்னொரு புறம் ஆத்மா ஹீலிங் நிறுவனத்தின் ஊழியரான ஆயிஷா (Surveen Chawla) தொடக்கத்தில் அமைதியான ஆன்மீக தியான வழிகாட்டியாக, பின்னர் காவல் அதிகாரி கல்பனாவிடம் காதல் வயப்படுகிறார். இறுதிக் காட்சிகளில் யூகிக்க முடியாத புதிய பரிமாணமும் எடுக்கிறார். இறுதியில் Tama முற்றிலும் அழிக்கப்பட்டதா இல்லையா என்பதை ஒரு சஸ்பென்ஸ் நிறைந்த சங்கேதக் குறிப்புடன் முடித்திருக்கிறார்கள்.

அனுபவமும் நினைவுகளும் வரலாறும் மரபணுவில் பின்னிப் பிணைந்த ஒரு மனிதனின் நனவிலி மனம் (Conscious)தான் அவன். அவனிடமிருந்து அதை எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டால் எத்தனை நூற்றாண்டு காலம் கழித்தும் எந்த உடல் வழியாக வேண்டுமானாலும் அவனை உயிர்ப்பிக்கலாம். இதைத்தான் நம் வள்ளலார் "மரணமில்லா பெருவாழ்வு" என்கிறார். தமிழ் மெய்ஞானிகளோ இதை அக(சிந்தனை) வழியில் அடைவது பற்றி பேசியுள்ளார்கள். ஆனால் இதையே நவீன அறிவியல் கொண்டு அடைய முயற்சிக்கிறது மேற்கு இலுமினாட்டி உலகம்.

அப்படி இந்த சீரிஸில் அறிவியல் ஆராய்ச்சியாக சாகாவரம் தொடர்பில் டாக்டர் சகாய் முயற்சிக்கிறார். மூளை நரம்புகள் வழியே மனிதனின் Consciousஐ ஒரு டிஜிட்டல் தரவாக கணினியில் சேமிக்க முயற்சிக்கிறார். ஆனால் அந்த ஆராய்ச்சி அவருடைய அறிவியலை மீறி ஒரு எதிர்மறை சூப்பர்நேச்சுரல் (தமா) ஆற்றலுக்கு உதவுகிறது. அதன் பிறகு ஆட்டத்தை அது ஆடுகிறது. அதன் சூத்திரதாரி யார்? இறுதியில்



நடக்கப்போவது என்ன? என்பதை நோக்கி விறுவிறுப்பும் திகிலும் கலந்த அனுபவமே அந்தேரா. இப்படி அறிவியல் புனைவாக தொடங்கி அமானுஷ்யத்தை நோக்கி நகர்கிறது இந்த சீரிஸ்.

படத்தின் சில சப் பிளாட்கள் சீராக முடிக்கப்பட்டிருக்கலாம், மெதுமெது வாக நகரும் சில எபிசோடுகள், சமநிலைக்கு போராடும் திரைக்கதை, அமானுஷ்ய ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யாத அவசர கிளைமாக்ஸ் என சிலவற்றை சொல்லலாம். இருப்பினும் அந்தேராவின் விஷூவல்ஸ், சவுண்ட் எஃபெக்ட், இருளை உணர்த்தும் லைட்டிங் மற்றும் திரைமொழி, ஆகிய அனைத்தும் ஒரு psychological horrorஐ முழுதாக உணர்த்த வைப்பதாக அமைந்துள்ளன.

வழக்கமான பேய் திரைப்படங்களில் இருந்து வேறுபட்ட கதை கருவாக இந்த சீரிஸில் பயன்படுத்தப்பட்டது தான் "இருட்டு துரத்துகிறது" என்கிற கான்செப்ட். உலக அளவில் இந்த பாணியில் பல திரைப்படங்கள் மற்றும் சீரிஸ் இருந்தாலும் இந்தியாவில் பன்மொழி சீரிஸாக உருவாகி வந்துள்ள இந்த சீரிஸ், இதன் கதை(உள்ளடக்கம்) அளவில் கொஞ்சம் 'ரேர் பீஸ்' தான்!

**சிவசங்கர்**
பத்திரிகை பாடல்
திரைக்கதை ஆசிரியர்.
9566394137



# பையனூரில் பெப்சியின் பேருந்து நிறுத்தம்



பையனூர் கிராம பஞ்சாயத்து தலைவர்திருமதி சுமுத்ரா முத்துக்குமார் அவர்களின் கோரிக்கையை ஏற்று பெப்சி (தென்னிந்திய திரைப்படத்தொழிலாளர்கள் சம்மேளனம்) பையனூரில் பேருந்து நிறுத்தத்தை கட்டித் தருகிறது. இதை ராமலிங்கம் மேஸ்திரி அவர்கள் முன் நின்று கட்டித் தருகிறார். விழாவில் பெப்சி தலைவர், இயக்குநர் ஆர். கே.செல்வமணி அவர்களும் தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத் தலைவர், இயக்குநர் ஆர்.வி. உதயகுமார் அவர்களும் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தனர். விழாவில், பெப்சி செயலாளர் சுவாமிநாதன், இசையமைப்பாளர் தினா, நடிகர் இளவரசு, கவுன்சிலர் வினோத்குமார் மற்றும் வார்டு மெம்பர்கள், ஊர்மக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





# 'ஹைக்கூ' இயக்குநர் லிங்கூ

பக்கம் 1 தொடர்ச்சி




**நெல் கவ்விக் கூண்டேகிய கிளிக்குத் தெரியாது விதைத்தவனுக்குத்தான் சீட்டு எடுத்தோம் என்பது**

*"நெல் கவ்விக் கூண்டேகிய கிளிக்குத் தெரியாது விதைத்த வனுக்குத்தான் சீட்டு எடுத்தோம் என்பது".*

போன்ற அற்புதமான வரிகளில் ஹைக்கூக்களை வழங்கியிருக்கிறார்.

தற்போது 'பெயரிடப்படாத ஆறுகள்' என்ற தலைப்பில் வெளியாகி உள்ள இந்த நூலில் திண்டுக்கல் காந்திகிராமப் பல்கலைக்கழகத்தில் சென்ற ஆண்டு லிங்குசாமி கவிதைகள் குறித்து எழுத்தாளர் சுப்ரபாரதி மணியன் அவர்களின் அறக்கட்டளை சொற்பொழிவுக்காக இயக்குநர் பிருந்தாசாரதி ஆற்றிய உரை 'விடுபட்ட இடங்களை நிரப்பும் ஹைக்கூ கவிதைகள்' என்ற தலைப்பில் மதிப்புரையாக வெளிவந் துள்ளது.

இந்த நூலின் பதிப்பு புதுமையான முறையில் திண்டுக்கல் தமிழ் பித்தன் அவர்களின் அழகான ஓவியங்களோடு வெளிவந்துள்ளது.

அந்த ஓவியங்களை இணைப் படைப்புகள் என்றே குறிப்பிடுகிறார் கவிஞர் கலாப்ரியா.

இந்த நூலை வெளியிடும் படைப்பு பதிப்பகம் ஜின்னா அஸ்மி அவர்கள் சிறப்பாக பதிப்பித்துள்ளார். விழாவை விஷ்ணு அசோசியேட் ஆர். சிவகுமார் சிறப்பாக நடத்தினார்கள். பரபரப்பான திரையுலகப் பணிகளுக்கு இடையில் இவ்வாறான அழகான கவிதைகளைப் படைக்கும் இயக்குநர் என். லிங்குசாமிக்கு திரைமொழியின் அன்பான வாழ்த்துக்கள்.



# "கவிக்கோ" ஆவணப்பட இயக்குநர் பிருந்தாசாரதிக்கு பாராட்டு

## 'திரை மொழி' சிறப்பு மலர் வெளியீடு

உமறுப் புலவர் வாரிசுகள் அறக்கட்டளை மற்றும் அறிவியல் தமிழ் வளர்க்கும் முதல் மொழி அமைப்பு ஆகியவற்றின் சார்பாக கவிக்கோ அப்துல் ரகுமான் ஆவணப்படம் திரையிடல் 23. 08 .25 அன்று மாலை சென்னை கவிக்கோ மன்றத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சி, பொறியாளர் ப. இரேசேந்திரன் (பொருளாளர், முதல் மொழி) அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் **திரு.அ.முகமது ஜியாவுதீன்** (மேனாள் அமர்வு நீதிபதி மற்றும் முழு நேர உறுப்பினர், மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையம்), கவிஞர் ஏர்வாடி ராதாகிருஷ்ணன் (ஆசிரியர் கவிதை உறவு ) உமறுப் புலவர் வாரிசுகள் அறக்கட்டளைத் தலைவர் திரு.அகமது ருமைஸ்தீன் ஸ்பைசி, பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன், கவிஞர் சர்புதீன், திரு. அ. அன்பழகன், (பொதுச்செய லாளர் உமறுப்புலவர் வாரிசுகள் இலக்கிய அறக்கட்டளை)

கவிஞர் தமிழ் இயலன், டிஸ்கவரி புக் பேலஸ் வேடியப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உரையாற்றிய அனைவரும் கவிக்கோவின் கவிதைகளையும், அவருடனான தங்கள் நினைவையும் பகிர்ந்து கொண்டது நிகழ்ச்சியின் சிறப்பாக அமைந்தது.

விழாவில் கவிக்கோ ஆவணப் படம் இயக்கியதற்காக இயக்குநர் பிருந்தாசாரதிக்கு, உமறுப்புலவர் அறக்கட்டளை சார்பாக நினைவுப் பரிசும், பாராட்டி ரூ.10 ஆயிரம் பரிசும் வழங்கப்பட்டது.

கவிக்கோ ஆவணப்படத் திரையிடலை ஒட்டி 'திரை மொழி' மாத இதழ் வெளியிட்ட சிறப்பு மலரும் இவ்விழாவில் வெளியிடப் பட்டது.

விரைவில் கோவையில் ஆவணப்படம் திரையிட ஏற்பாடு செய்யப்படும் என்று சிறப்புரையாற்றிய மேனாள் அமர்வு நீதிபதி முகமது ஜியாவுதீன் அவர்கள் தெரிவித்தார்கள்.

''இந்த ஆவணப் படம் கவிக்கோ இன்னும் நம்மோடு வாழ்ந்து கொண்டும் பயணித்துக் கொண்டும் இருக்கிறார். தொடர்ந்து வாழ்ந்து கொண்டே இருப்பார் என்ற உணர்வைத் தோற்றுவிப்பதாக" கலைமாமணி ஏர்வாடி இராதா கிருஷ்ணன் குறிப்பிட்டார். திருச்சி ஜமால் முகமது கல்லூரி காட்சி ஊடக மாணவர்களுக்காக இம்மாதம் கவிக்கோ ஆவணப்படம் திரையிடப்படுகிறது.

'கவிக்கோ மன்றம் அமைத்து கவிக்கோ அப்துல் ரகுமான் புகழை நிலைநாட்டிய சிங்கப்பூர் முஸ்தபா இந்த ஆவணப்படத்தை தயாரித்ததன் மூலம் மேலும் புகழ் சேர்த்திருக்கிறார்.

தங்கள் ஊர் இலக்கிய நிகழ்ச்சிகளிலும், கல்லூரிகளிலும் திரையிட விரும்புவோர் தொடர்பு கொண்டால் ஆவணப்படம் கவிக்கோ மன்றத்தின் சார்பாக அனுப்பி வைக்கப்படும்' என்று இயக்குனர் பிருந்தா சாரதி தெரிவித்தார்.

தொடர்புக்கு
**99414 64832**

திரை மொழி

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
கௌரவ ஆசிரியர்கள் : குரு ரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : V. கார்த்தி குமார்
தலைமை நிருபர் : பாலமுரளிவர்மன்
நிருபர் : தங்கமித்ரன்

தொடர்புக்கு :
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766







## விஜய் கனிஷ்காவுக்கு 'சைமா' விருது



தென்னிந்திய சர்வதேச திரைப்பட விருதுகள் (SIIMA சைமா விருதுகள்) இது தென்னிந்திய திரையுலக கலைஞர்கள் மற்றும் அவர்களின் தொழில்நுட்ப சாதனையை கௌரவப்படுத்தும் விழாவாகும்.

இவ்விழாவில் தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் இந்த நான்கு மொழிகளிலும் சிறந்த படம் சிறந்த நடிகர்கள் நடிகைகள் இசையமைப் பாளர்கள் ஒளிப்பதிவாளர்கள் உட்பட 19 பிரிவுகளில் ஆண்டுதோறும் பரிசு வழங்கப்படுகிறது. சரத்குமார் மற்றும் தமிழ் திரை உலகின் பிரபல தமிழ் இயக்குநர் விக்ரமனின் மகன் விஜய் கனிஷ்கா நடிப்பில் வெளியான படம் 'ஹிட் லிஸ்ட்' இந்த படத்திற்காக அவருக்கு சிறந்த புதுமுக நடிகர் விஜய் கனிஷ்கா என்று துபாயில் நடந்த விழாவில் சைமா விருது வழங்கப் பட்டது.




டெல்லியில் நடந்த ஜாக்ரன் திரைப்பட விழாவில் சசிகுமார் நடித்த 'டூரிஸ்ட் ஃபேமிலி' இ.வி.கணேஷ்பாபு நடித்த 'ஆசான்' குறும்படம் திரையிடப்பட்டது.


## இயக்குநர் தேவயானியின் 'கைக்குட்டை ராணி'க்கு மூன்று விருதுகள்




கொல்கத்தா மாநகரில் நடைபெற்ற 8வது ரிதுரங்கம் பன்னாட்டு திரைப்பட விழாவில் திரைக்கலைஞர் தேவயானி தயாரித்து இயக்கிய 'கைக்குட்டை ராணி' எனும் குறும்படம் மூன்று விருதுகளை வென்றுள்ளது. சிறந்த இசையமைப்பாளர் என்ற விருது இசை ஞானி இளையராஜாவுக்கும், சிறந்த பாடகர் என்ற விருது ஸ்வேதா மோகனுக்கும், சிறந்த போஸ்டர் வடிவமைப்பு என்ற விருதும் கைக்குட்டை ராணி குறும்படம் பெற்றது. இவ்விழாவில் தேவயானி கலந்து கொண்டு அனைத்து விருதுகளையும் நேரில் பெற்றார்.



# ஹாலிவுட் கதையமைப்பில் ‘நளவெண்பா’



உற்சாகமும், சுறுசுறுப்பும் ஆஸ்கர் தாத்தாவின் கவச குண்டலங் கள். அவரை மேலும் உற்சாகப்படுத்தி யது சின்சானின் அலைபேசித் தகவல். "ஹலோ தாத்தா! இன்னைக்கு நான் புது ஸ்கூல்ல சிக்ஸ்த் ஸ்டாண்டர்ட் ஜாயின் பண்ண போறேன்; திரி டேஸ்க்கு அப்புறமா வீட்டுக்கு வரேன்.."

என்று போனில் சின்சான் கூறிய விஷயத்தை கேட்டு இன்னும் ஒரு மெதுவடை வேண்டுமென பாட்டியிடம் கேட்டு சாப்பிட்டு காலை டிஃபனை முடித்தார் ஆஸ்கர் தாத்தா.

நான்காவது நாள் மாலை, சின்சான் ஏதோ பாட்டை முணு முணுத்த படி, துள்ளல் நடையுடன் ஆஸ்கர் தாத்தா வீட்டிற்கு வரும் பொழுது, கூடவே ஒரு 25 வயது மதிக்கத்தக்க இளைஞனையும் அழைத்து வந்திருந்தான். ஏதோ மியூசியத்திற்கு வந்தது போல அந்த இளைஞரின் கண்ணில் ஒரு உற்சாக ஒளி வீசியது.

"தாத்தா, இவர் எங்க புது ஸ்கூல் PET மாஸ்டர் சரவணன் சார" என்று அறிமுகம் செய்து வைக்க,

அடடே வாங்க, வாங்க! விவேகானந்தர் சொன்ன நூத்துல ஒருத்தரை கண்டுபிடிச்சிட்டேன்... என்றார் பெருமை பொங்க,

நன்றி சார்! உங்க ரூபத்துல இன்னும் விவேகானந்தர் வாழ்ந்துகிட்டு இருக்கிறார் அப்படிங்கிறது எனக்கு சந்தோஷம் சார்!

ஹா ஹா! ஹா!

வட்டமேசை மாநாட்டில் பங்கேற்று இருநாட்டு தலைவர்களை அறிமுகப்படுத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் போல, தானும் ஒரு நாற்காலியில் வசதியாக அமர்ந்திருந்தான் சின்சான். காஃபியோடு வந்த பாட்டியும் மூன்றாவது அணி போல வந்து மாநாட்டில் ஐக்கியமானாள்.

நேற்று மதியம் பள்ளியில், சின் சான் சக மாணவர்களுடன் சினிமா பற்றிய செய்திகளுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்ததாகவும், முதல் ஆஸ்கர் வாங்கிய படம் எது? எப்பொழுது ஆஸ்கர் துவங்கப்பட்டது? ஆஸ்கர் வாங்கிய முதல் இந்திய பெண்மணி யார்? என்பன போன்று பல்வேறு கேள்வி பதில்களுடன் அவன் மற்ற மாணவர்களிடம் உரையாடிக் கொண்டிருந்ததை தான் கேட்டதாகவும், மேலும், அவன் சினிமா பற்றிய பல்வேறு பொது அறிவிற்கு உகந்த சுவாரஸ்ய தகவல்களை மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டு இருந்ததை பார்த்த தாகவும், ஆர்வத்துடன் அவனைப் பற்றி விசாரித்து, முடிவில் ஆஸ்கர் தாத்தா வீட்டை அடைந்த கதையை Alice in Wonderland போல சரவணன் ஒரே மூஞ்சில் சொல்லி முடிக்க, நேரம் இப்பொழுது ஒன்பது மணி என்று, ஒன்பது முறை பெல் அடித்து, தெருக்கோடியில் உள்ள திருக்கோயில் ஒன்றின் ஒலிபெருக்கி உறுதி செய்து கொண்டிருந்தது.

சனிக்கிழமை காலை. மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்ட காவிரி வெள்ளம் கடைமடையின் மணற்பரப்பில் தவழ்ந்து வர, மலர் தூவி வரவேற்கும் விவசாயிகளை மகிழ்ச்சி யுடன் ஆஸ்கர் தாத்தா தொலைக்காட்சி செய்தியில் பார்த்துக் கொண்டிருந்த அதேசமயம், "பாக்யம் விலாஸி"ன் வாசலில்(ஆஸ்கர் தாத்தா வீடுதான்), வெள்ளை டீ சர்ட், காக்கி பேண்ட் சகிதமாக சரவணனும், மஞ்சள் டீ சர்ட், நீல நிற ட்ரவுசரில் சின்சான்னும், உற்சாகத்துடன் முதற்படியில் காலடி வைத்துக் கொண்டிருந்தனர்.

"எனக்கு பல நாளா ஒரு சந்தேகம்! இந்த விலாஸ் அப்படிங்கற பேர்ல இருந்து வில்லாஸ் வந்ததா? இல்ல வில்லாஸ் அப்படிங்கற பேர்ல இருந்து விலாஸ் வந்ததா"? என்ற கேள்வியை சின்சான் சரவணனிடம் கேட்டுக் கொண்டே படி ஏற, குரல் கேட்ட தாத்தா உற்சாகமானார்.

தனது இரண்டாவது சந்திப்பில் சரவணன், தான் ஒரு முறை பயணம் செய்யும் பொழுது கண்ணதாசன் பாடலை விரும்பி கேட்ட பின்னர், தமிழின் மீது ஆர்வம் எழுந்ததாகவும், தொடர்ந்து தமிழில் MA டிகிரி முடித்த பின்னர், அதில் ஒரு Doctorate வாங்கும் ஆசை எழுந்ததாகவும், வேலையில் சேர்ந்த பிறகு அந்த ஆசையை சிறிது காலம் தள்ளி வைத்து விட்டதாகவும், பள்ளிக்கு புதிதாக வந்த சின்சான் மூலம் அந்த ஆசை மீண்டும் துளிர்த்து எழுந்ததாகவும், அதற்கு சில வழிகாட்டுதல்களை வேண்டி ஆஸ்கர் தாத்தாவிடம் வந்திருப்பதாகவும், சரவணன் கூறியதாக இரண்டு மணி நேர நீ....ண்...ட உரையாடலில் கலந்து கொண்டு காலை டிஃபனுடன் அவர்களை உபசரித்த பாக்யம் பாட்டி புரிந்து கொண்டாள்.

"அடடே, ஆச்சர்யமா இருக்கே! உங்க முயற்சியை நான் பாராட்டுறேன். இன்ஃபேக்ட், கொஞ்ச நாளைக்கு முன்னாடி தான் நம்ம தமிழ் இலக்கியத்துல இருக்கிற நளவெண்பா, மகாபாரதத்துல வர்ற. நளதமயந்தி கதை இதெல்லாம் ஹாலிவுட்ல இருக்கிற த்ரி ஆக்ட் ஸ்ட்ரக்சர்ல்ல பொருந்தி போகுதான்னு புரிஞ்சுக்க முயற்சி பண்ணிட்டு இருந்தேன். அதுவே PhD பண்றதுக்குன்னு ஒரு நல்ல ஐடியா தான்னு எனக்கு தோணுது..."

"நீங்க யுனிவர்சிட்டில கோர்ஸ் enroll பண்ணிட்டு கைடு கிட்ட கன்சல்டேஷன் வாங்கிக்கங்க. இந்த ஐடியா ஒர்க் அவுட் ஆகுமான்னு பேசி பார்க்கலாம் இல்ல... வேற டாபிக் எடுத்துக்கலாம்னாலும் கண்டிப்பா பேசலாம் ... " என்றார் தாத்தா.

"நிச்சயமா சார்! நீங்க இப்ப சொன்ன ஐடியாவே பென்டாஸ்டிக்கா இருக்கு", என்று சரவணன் கூற, தாத்தா அதை ஆமோதித்தார்.

'தாத்தா! நளவெண்பா கதை என்னான்னு சொல்லுங்க"? அருகில் சென்று தாத்தவின் டிசர்ட்டை பிடித்து இழுத்து சின்சான் கேட்க,

சின்சானின் கன்னத்தை தட்டியபடியே தாத்தா, "கண்டிப்பா சொல்றேன்! முதல்ல நான் சொன்னேன்ல.... அந்த StopMotion Animation movie... The Wrong Trousers பாத்திட்டியா%?" என கேட்க,

"ஓ! எஸ், பாத்துட்டேனே! " என சின்சான்

கூற, இருவரும் ஒரு ஹை ஃபைவ் செய்து கொண்டனர்.

பின்னர். தாத்தா மற்றும் சரவணன், தாத்தா மற்றும் சின்சான், சரவணன் மற்றும் பாட்டி, பாட்டி மற்றும் சின்சான் என தனித் தனி உரையாடல்கள், குடும்ப விசாரிப்புகள், கேள்வி பதில்கள் என காஃபியுடன் காலைப் பொழுது கரைந்து கொண்டிருந்தது.

தற்பொழுது தான் எழுதிக் கொண்டிருக்கும் வேறு ஒரு புத்தகத்திற்கு சில விளக்கங்கள் கேட்டு பதிப்பாளர் ஒரு சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்துள்ள தாகவும், அவரை இப்பொழுது சந்திக்க செல்வதாகவும், முடிந்தால் இரவு மொட்டை மாடியில் அடுத்த சந்திப்பில் கதை பேசலாம் என தாத்தா சொல்ல, வழக்கமாக கதை கேட்க கூட்டமாக வரும் நண்பர்கள் குழாம் மற்றும் சரவணன் சாருடன் இரவு வருவதாக சொல்லி விடைபெற்ற சின்சானையும், சரவணனையும் வாசல் வரை வந்து வழி அனுப்பி வைத்தனர் தாத்தாவும் பாட்டியும்.



**மூர்த்தி நடராஜன்**
பொறுப்பு ஆசிரியர், திரைமொழி

# இந்திய ஆஸ்கர் குழுவில் இயக்குநர் ஆர்.வி.உதயகுமார்



திரைப்படத்துறையில் சர்வதேச அளவில் மிகப்பெரிய அங்கீகாரமாக கருதப்படும் ஆஸ்கர் விருதுக்கான படங்கள் மற்றும் கலைஞர்களை பரிசீலிக்க மத்திய அரசு குழு *(film federation of India)* FFIஒன்று அமைத்துள்ளது இந்த ஆண்டு 98 வது ஆஸ்கார் விருது தேர்வு நடைபெற்றது.

இந்த குழுவில் இயக்குநர் ஆர்.வி.உதயகுமார் அவர்கள் ஜூயூரியாக தேர்வு செய்யப்பட்டார்.

இவர் ஏற்கெனவே மாநில விருது குழுவில் இருந்து, பின் தேசிய விருது குழுவில் இடம் பெற்று தற்பொழுது ஆஸ்கர் விருது குழுவில் இடம் பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தமிழ் திரைப்பட உலகிற்கும் இயக்குநர்களுக்கும், தலைவராக இருக்கும் தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்திற்கும் பெருமை சேர்ப்பதாக உள்ளது.

மரியாதைக்குரிய இயக்குநரும், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் தலைவருமான திரு. ஆர்.வி.உதயகுமார் அவர்களுக்கு திரைமொழி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.



## இசையமைப்பாளர் எஸ்.ஜெ.ஜனனி புதிய ரெக்கார்டிங் ஸ்டுடியோ திறப்பு விழா!





பிரபா, ரயில், திரைப்பட இசையமைப்பாளர் எஸ் ஜெ.ஜனனி புதிதாக 3 டாட் ரெக்கார்டிங் ஸ்டுடியோ ஒன்றை திறந்து இருக்கிறார். இது தி நகர் வடக்கு உஸ்மான் சாலையில் உள்ளது. பிரம்ம குமாரிகள் அமைப்பின் தென் மண்டல சேவை ஒருங்கிணைப்பாளர் ராஜ யோகினி பி.கே. பினாஜி, கலைப்புலி எஸ்.தாணு, பாடகர் உன்னிகிருஷ்ணன், மயிலாப்பூர் ஆர்.கே.கன்வென்சன் நிறுவனர் ஆர்.கே.ராமகிருஷ்ணன், திரைப்பட இயக்குநர் கே.பாக்யராஜ் கர்நாடக இசையமைப்பாளர் அருணா சாய்ராம், இயக்குநர் நந்தன், இயக்குநர் ISR செல்வகுமார், தயாரிப்பாளர் டிஸ்கவரி வேடியப்பன், பாடலாசிரியர் ரமேஷ் வைத்தியா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இசையமைப்பாளர் எஸ்.ஜெ.ஜனனி, ஆர்.சங்கர் கணேஷ் அனைவரையும் வரவேற்றனர்.

# 'சத்ய ஜோதி' T.G. தியாகராஜன், தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்கத்தின் (Tamil Film Active Producers Association) தலைவராக ஒருமனதாக தேர்வு

தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்கம், ஆகஸ்ட் 2020ல் 'இயக்குநர் இமயம்' திரு. பாரதிராஜா அவர்களால், பல முன்னணி தயாரிப்பாளர்களுடன் இணைந்து தோற்றுவிக்கப்பட்டது. இன்று இந்த சங்கம் 365க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கொண்ட பெரிய சங்கமாக வளர்ந்து தனது உறுப்பினர்களுக்கு பல சேவைகளை செய்து வருகிறது.

தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்கம், தென்னிந்திய தொழிலாளர்கள் சம்மேளம் (FEFSI) மற்றும் அதை சார்ந்த அனைத்து சங்கங்களுடனும், திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் சங்கங்களுடன் இணைந்து சிறப்பாக செயலாற்றி வருகிறது. அதனால் தான், இன்று இந்த சங்கத்தை மத்திய அரசும், மாநில அரசும் அங்கீகரித்து, சினிமா துறை சார்ந்த அனைத்து கலந்துரையாடல்கள் மற்றும் முடிவுகளில் இணைத்துள்ளனர் தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர் சங்கம், திரைப்பட தலைப்பு, விளம்பர அனுமதி மற்றும் உறுப்பினர்களுக்கு தேவைப்படும் அனைத்து சேவைகளையும் துரிதமாக வழங்கி வருகிறது. அதன் காரணமாக தான், ஒவ்வொரு மாதமும் பல புதிய உறுப்பினர்கள் சங்கத்தில் இணைந்து வருகிறார்கள். மேலும், இந்திய சினிமாவில் முதன் முறையாக தயாரிப்பாளர் சங்கமே ஒரு திரைத்துறை வழிகாட்டி நூலை (Trade Guide) ஒவ்வொரு மாதமும் கொண்டு வருகிறது. அதன் மூலம் பல தயாரிப்பாளர்களுக்கும், திரைத்துறைக்கு தேவைப்படும் அனைத்து விபரங்களும் தெரிவிக்கப்படுகின்றன.




தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்கத்திற்கு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை தேர்தல் நடந்து, புதிய நிர்வாக குழு அமைக்க வேண்டும் அதன் படி, 2025-28க்கான புதிய நிர்வாகிகளை தேர்ந்தெடுக்க, மதிப்புக்குரிய இயக்குநர் திரு.R.V. உதயகுமார், தேர்தல் அதிகாரியாக சங்கத்தால் நியமிக்கப்பட்டு, தேர்தல் நடைபெற்றது. தகுதி உள்ள 7 அலுவலக நிர்வாகிகள் மற்றும் 10 செயற்குழு உறுப்பினர்கள் ஒரு மனதாக, எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களின் விபரம் பின் வருமாறு.

**தலைவர் : திரு. T.G.தியாகராஜன்**

**பொதுச் செயலாளர் திரு. T. சிவா**

**துணைத் தலைவர்கள் : திரு. S.R. பிரபு & S.S. லலித் குமார்**

**பொருளாளர் : திரு. G. தனஞ்ஜெயன்**

**இணைச் செயலாளர்கள் : திரு. முகேஷ் R. மெஹ்தா & திரு. S. வினோத் குமார்.**

**செயற்குழு உறுப்பினர்கள்:**

**இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர்கள் திரு. K.S.ரவிக்குமார், திரு. சுந்தர் C, திரு. விக்னேஷ் சிவன், திரு. R. கண்ணன், தயாரிப்பாளர்கள் திரு. ரமேஷ் P.பிள்ளை, திரு. S. லக்ஷ்மன் குமார், திரு. சுதன் சுந்தரம், திரு. கமல் போஹ்ரா, திரு.கார்த்திகேயன் சந்தானம் மற்றும் திரு. நிதின் சத்யா.**

தேர்ந்தெடுக்கப்பட்டதயாரிப்பாளர்களுக்கான நியமன கடிதத்தை தேர்தல் அதிகாரி இயக்குநர் திரு.R.V. உதயகுமார், சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு T. சிவாவிடம் தந்தார். புதிய நிர்வாக குழு மேலும் சிறப்பாக செயல்பட தனது வாழ்த்துக்களை அவரிடம் தெரிவித்தார்.

தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்கத்தின் நிறுவனர் திரு. பாரதிராஜா அவர்களின் வழிகாட்டுதலுடன், திரைத்துறையின் அனைத்து சங்கங்களின் ஆதரவுடன், மேலும் சிறப்பாக செயல்படவும், பல புதிய முயற்சிகளை தொடங்கவும் புதிய நிர்வாக குழு உறுதி கொண்டிருக்கிறது.

சங்கத்தின் ஊடக/பத்திரிக்கை தொடர்பாளர்: திரு. நிகில் முருகன்

Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI.** Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**